http://www.apsira.com
Indian Education Portal

Question Paper Downloaded from
http://samacheerkalvi.apsira.com/

7T

**கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் – 2011**

www.rktuitioncentre.blogspot.com

**வகுப்பு 7**

காலம்: 2.30 மணி — **தமிழ்** — மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) 'வண்மையை உயிரில் வைத்த' இந்த அடியில் 'வண்மை' என்னும் சொல் தரும் பொருள்
அ) வலிமை ஆ) கொடைத்தன்மை இ) வளமை

2) வாய்மை எனப்படுவது யாதெனில்
அ) மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல் ஆ) புறங்கூறாமை
இ) பழிகூறாமை

3) உலக மொழிகளில் சிறந்து விளங்குவது
அ) தமிழ்மொழி ஆ) வடமொழி இ) மலையாளம்

4) முதலெழுத்துகளின் எண்ணிக்கை
அ) 216 ஆ) 30 இ) 247

5) முதுமொழிக்காஞ்சி ________ என்னும் பொருள்படும்.
அ) நன்னெறி ஆ) அறநூல் இ) அறிவுரைக்கோவை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5×1=5

6) திரு.வி.க இயற்றிய 'பொதுமை வேட்டல்' என்னும் தலைப்பில் உள்ள பாக்களின் எண்ணிக்கை ________.
7) திருக்குறளில் ________ அதிகாரங்கள் உள்ளன.
8) எல்லா மொழிகளிலும் எழுத்துக்கும் ________ இலக்கணம் உண்டு.
9) சார்பெழுத்துகள் ________ வகைப்படும்.
10) தமிழ்த்தாத்தா என்றழைக்கப்படுபவர் ________.

**III. அடிபிறழாமல் எழுதுக:**

11) 'நெல்லும் உயிரன்றே' எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக. 4
12) 'தன்நெஞ்சு' எனத் தொடங்கும் குறளையும், 'விளக்கு' என முடியும் குறளையும் எழுதுக. 4

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:** 5×2=10

13) திரு.வி.க. இயற்றிய நூல்கள் நான்கனை எழுதுக.
14) பொய்மையும் வாய்மையாவது எப்போது?
15) புறநானூறு சிறுகுறிப்பு தருக.
16) உலக உயிர்களைக் காக்கின்றவை எவை?
17) மதுரைக் கூடலூர் கிழார் பற்றிக் குறிப்பு எழுதுக.
18) மேதை வண்மை இவற்றைக் காட்டிலும் சிறந்தன யாவை?

**V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** 2×5=10

19) இறைவனின் பெருமையைத் திரு.வி.க. எவ்வாறெல்லாம் குறிப்பிடுகின்றார்?
20) உண்மையைப் பேசுவோரின் சிறப்பியல்புகள் யாவை?
21) முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் சிறந்த பத்துகள் எவை? விளக்குக.

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:** 5×2=10

22) தமிழின் இளமை மாறாத் தன்மைக்குக் காரணம் என்ன?
23) தமிழர் தம் பண்பாட்டை விளக்கும் நூல்கள் யாவை?
24) தமிழ் தனித்தியங்கும் மொழி என்பதைக் குறிப்பிடுக.
25) மீனாட்சி சுந்தரனார் இளமையில் எவ்வாறு தமிழ் கற்றார்?
26) மீனாட்சி சுந்தரனாரின் நகைச்சுவையை விளக்குக.
27) மீனாட்சி சுந்தரனாருக்குத் தமிழ் மீதுள்ள பற்றினை விவரிக்க.

**VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** 2×5=10

28) தமிழின் தனிப் பெருந்தன்மைகளை விளக்குக.
29) மீனாட்சி சுந்தரனாரின் பண்புநலன்களை விளக்குக.
30) மீனாட்சி சுந்தரனார் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைக் கூறுக.

http://www.apsira.com
Indian Education Portal

Question Paper Downloaded from
http://samacheerkalvi.apsira.com/



**VIII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:** 5×2=10

31) முதலெழுத்து என்றால் என்ன?

32) சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

33) கீழே உள்ள சொற்களில் முதலெழுத்தை வட்டமிடுக:
அன்பு, கடல், இன்பம், தமிழ்

34) சார்பெழுத்து என்றால் என்ன?

35) விடுபட்ட எழுத்தை எழுதுக:
க் + ____ = கு, ம் + எ = ____, ____ + ஐ = பை, ____ + ____ = பூ

36) அஃகேனம் சொல்லில் எவ்வாறு இடம் பெறும்?

**IX. எல்லா வினாக்களுக்கும் விடை தருக:** 4×2=8

37) ***பொருள் தருக:***
அ) பண் ஆ) அகம் இ) பிணி ஈ) மெய்

38) ***பிரித்து எழுதுக:***
அ) புறந்தூய்மை ஆ) யாதெனின் இ) பிணியின்மை ஈ) குலனுடைமை

39) ***சேர்த்து எழுதுக:***
அ) தன் + நெஞ்சு ஆ) புகழ் + இல்லை
இ) பதுங்கி + சென்றான் ஈ) புலம்பி + தீர்த்தான்

40) ***எதிர்ச்சொல்:***
அ) இயற்கை ஆ) நன்மை இ) இளமை ஈ) நண்பர்

**X. பொருத்துக:** 4×1=4

41)

| | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|
| அ) | 1 | எ |
| ஆ) | 5 | அ |
| இ) | 7 | க |
| ஈ) | 8 | ரு |

**XI. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக:** 1×10=10

42) உனக்கு பிடித்த ஊர்

43) சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

**XII. கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக:** 1×10=10

44) ஊரும் பேரும்

45) கோவூர் கிழார்

------